## மகளிர்க்கான சிறந்த அரசை முதல்வர் வழங்கி வருகிறார்!

# இந்தியாவிலேயே வளர்ச்சி அடைந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

### சென்னை வடக்கு மாவட்டக் கழகம் – இராயபுரம் மேற்குப் பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் மகன் பி.எஸ்.அமர்நாத் – நவிஷா திருமணத்தை நடத்தி வைத்து

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை,பிப்.14-

**சென்னை வடக்கு மாவட்டக் கழகம் இராயபுரம் மேற்குப் பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் மாமன்ற உறுப்பினர் கீதா சுரேஷ் இணையரின் மகன் பி.எஸ்.அமர்நாத் - நவிஷா இணையரின் திருமணத்தை இராயபுரம் தங்கம் மாளிகையில், நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார். இதில் கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.**

**விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இன்று ராயபுரம் மேற்குப் பகுதி கழகச் செயலாளர் அண்ணன் சுரேஷ், மாமன்ற உறுப்பினர் சகோதரி கீதா சுரேஷ் அவர்களின் அன்பு மகன் அமர்நாத் அவர்களுக்கும், நவீன்ராஜ் - நிஷாந்தி அவர்களின் அன்பு மகள் நவிஷா இணையர்களுக்கும் திருமணத்தை உங்கள் முன்னிலையில், நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைத்திருக்கும் இரண்டு பேருக்கும் நம் அத்தனை பேரும் நம்முடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

**கழகத்தின் தாய் வீடு**

இன்று ராயபுரத்தில் இந்தத் திருமணம் நடந்து கொண்டிருக்கிறது. ராயபுரம்தான் நம்முடைய 'கழகத்தின் தாய் வீடு' என்று சொல்லலாம். அப்படிப்பட்ட ராயபுரம் பகுதியில் உள்ள கழகத்தின் தாய் வீட்டில் இந்தத் திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பைக் கொடுத்த மாவட்டக் கழகப் பொறுப்பாளர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கும், அண்ணன் சுரேஷ் அவர்களுக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திருமணம் ஒரு சிறப்பு வாய்ந்த திருமணம். இன்று கழகக் குடும்பங்களுக்கே உரிய வகையில், சுயமரியாதைத் திருமணமாக இது இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுவாக, அனைத்துத் திருமணங்களும் பகல் நேரத்தில், நல்ல நேரம் பார்த்து, குறிப்பாக இந்தப் பத்து, பத்தரை மணி, ராகு காலம் இதையெல்லாம் பார்த்து முடித்துவிடுவார்கள். ஆனால், இன்று மாலை நேரத்தில் இப்படி ஒரு திருமணம் நடக்கிறதென்றால், அது பகுத்தறிவைக் கடைபிடிக்கின்ற இயக்கமான நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும்தான் சாத்தியம்.

**சிறப்பாக நடத்தியவர்**

நம்முடைய அண்ணன் சுரேஷ் அவர்களைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 40 ஆண்டு காலம் இந்த இயக்கத்திற்காகத் தன் உழைப்பைக் கொடுத்தவர். 1984-ஆம் ஆண்டு கழகத்திற்கு எப்படி ஒரு நெருக்கடியான நேரம் என்று உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அன்று கழகம் ஆட்சியில் இல்லை, எதிர்க்கட்சி. அப்படிப்பட்ட அந்த நேரத்தில் இப்பகுதியில் கழகம் சார்பாக ஒரு மன்றத்தை ஆரம்பித்து சிறப்பாக நடத்தியவர்தான் அண்ணன் சுரேஷ் அவர்கள். அதுமட்டுமல்லாமல், கட்சியில் சேர்ந்து கிட்டத்தட்ட ஒரு பத்து ஆண்டுகள் எந்தப் பொறுப்பையும் எதிர்பார்க்காமல், கலைஞர் அவர்களின் உடன்பிறப்பு என்ற ஒரே அடையாளத்துடன் கழகத்திற்காக உழைத்திருக்கிறார் அண்ணன் சுரேஷ். அதற்கு அங்கீகாரமாகத்தான் டாக்டர் கலைஞர் அவர்கள், அவருக்கு வட்டக் கழகச் செயலாளர் பொறுப்பைக் கொடுத்து அழகு பார்த்தார்.





**கழகத்தின் கோட்டை**

அதன்பிறகு 2014-ஆம் ஆண்டு வட்டக்கழகச் செயலாளரிலிருந்து உயர்வு பெற்று, பகுதி கழகச் செயலாளராக இன்று வரை சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். சிறப்பாகப் பணியாற்றி, இன்றைக்கு ராயபுரத்தைக் கழகத்தின் கோட்டை என்று சொல்லும் அளவுக்கு இயக்கத்தை இப்பகுதியில் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். 2006, 2011-ஆம் ஆண்டுகளில் மாமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றி இருக்கிறார். இப்போது அவருடைய துணைவியார் திருமதி கீதா சுரேஷ் அவர்கள் மாமன்ற உறுப்பினராகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இப்படி கழகத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய குடும்பம் அண்ணன் சுரேஷின் குடும்பம். அப்படிப்பட்ட கழகக் குடும்பத் திருமணத்தை நடத்தி வைப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

இன்று இந்தத் திருமணத்தில் ஆண்களுக்கு நிகராக, இன்னும் சொல்லப்போனால், ஆண்களை விட அதிகமாக மகளிர் நிறைய பேர் பங்கேற்று இருக்கிறீர்கள். எனவே, மகளிராகிய உங்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒன்று மட்டும்தான். கடந்த ஐந்து ஆண்டுகளாக நம்முடைய கழகம் ஆட்சிக்கு வந்து, நம்முடைய முதலமைச்சர் பொறுப்பேற்று திராவிட மாடல் அரசு, குறிப்பாகப் பெண்களுக்கு ஒரு சிறந்த அரசை வழங்கி வருகிறது.

**மகளிருக்கு விடியல் பயணத் திட்டம்**

நம்முடைய தலைவர் முதலமைச்சர் பொறுப்பேற்று இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு விடியல் பயணத் திட்டம். இந்த விடியல் பயணத் திட்டத்தில் 660 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் ஒவ்வொரு மாதமும் சேமித்திருக்கிறார்கள்.

குறிப்பாக வேலைக்குச் செல்கின்ற பெண்கள் காலையில் எழுந்து குழந்தைக்குச் சீக்கிரம் உணவு சமைக்க வேண்டும். அந்தச் சிரமத்தைத் தவிர்க்க நம்முடைய முதலமைச்சர் அறிமுகப்படுத்திய திட்டம்தான் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் காலையில் தரமான உணவு, அதன்பிறகு தரமான கல்வி வழங்கப்படுகிறது. மகளிர் உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காகப் புதுமைப்பெண் திட்டம் கொண்டு வரப்பட்டது. காலை உணவுத் திட்டத்தின் மூலம் அதிக மகளிர் பள்ளிக்கூடம் வரத் தொடங்கிவிட்டார்கள்.

அப்படிப் பள்ளிக்கு வரும் குழந்தைகள் கல்லூரிக்குச் சென்று உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக, அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் அவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை நம்முடைய முதலமைச்சர் வழங்கி வருகிறார். இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போல ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வழங்கியிருக்கிறார்கள்.

**தலைசிறந்த மாநிலம்**

அதனால்தான் இன்று இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக 11.19% என இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு அடைந்துள்ளது. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திற்கும் இல்லாத பெருமை நம்முடைய தமிழ்நாட்டிற்கு உண்டு. வளர்ச்சி அடைகின்ற மாநிலமாகத் தமிழ்நாடு இன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்றால், நம்முடைய அரசு செயல்படுத்துகின்ற ஒவ்வொரு திட்டமுமே அதற்குக் காரணம்.

**முரட்டு அடிமை**

நம்முடைய முதலமைச்சர் இவ்வளவு திட்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், ஒன்றிய பா.ஜ.க அரசு அதற்குத் துணை நிற்கிறதா என்று பார்த்தால், எந்த நிதியும் தருவதில்லை. கல்வி நிதியாகக் கொடுக்க வேண்டிய 2,300 கோடி ரூபாயை ஒன்றிய அரசு கொடுக்கவில்லை. சமீபத்தில் ஒன்றிய அரசு பட்ஜெட் தாக்கல் செய்தது. அதில் தமிழ்நாடு என்கிற பெயரே இடம் பெறவில்லை. ஆனால், இவற்றையெல்லாம் கண்டிக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், இன்று மோடியின் ஒரு முரட்டு அடிமையாக மாறி, 'ஆமாம் சாமி' போடுகின்ற ஒருவராக உருவெடுத்திருக்கிறார். 'ஜாடிக்கு ஏற்ற மூடி' என்று சொல்வார்கள். அதுபோல மோடிக்கு ஏற்ற எடப்பாடியாக அவர் இருக்கிறார்.

அடிமைக் கூட்டத்தையும், பாசிசக் கூட்டத்தையும் தமிழ்நாட்டிற்குள் நுழைய விட்டுவிட்டீர்கள் என்றால், மீண்டும் தமிழ்நாடு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலைமைக்கே சென்றுவிடும். தமிழ்நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, இங்கே வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு கழக உடன்பிறப்புகளுக்கும், குறிப்பாக மகளிருக்கு அதிகமாக இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

**200 தொகுதிகளில் வெற்றி**

தலைவர் அவர்கள் நமக்குக் குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும் என்று இலக்கு கொடுத்திருக்கிறார்கள். ``வெல்வோம் 200, படைப்போம் வரலாறு" என்று தலைவர் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மீண்டும் வெற்றிபெற்று, நம்முடைய கழகத் தலைவர் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும். இன்னும் நம் கையில் வெறும் 50 நாட்கள்தான் இருக்கின்றன.

எனவே இங்கே வந்திருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் அந்தத் தேர்தல் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். 'ஏன் மீண்டும் நம்முடைய திராவிட மாடல் அரசு அமைய வேண்டும்? தமிழ்நாட்டிற்கு என்னென்ன திட்டங்களை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்? நாம் இல்லையென்றால், தமிழ்நாடு எதையெல்லாம் இழந்திருக்கும்?' என்பதை மக்களிடம் விளக்கிச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**ஒரேயொரு கோரிக்கை**

இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மூன்று தொகுதிகளும், குறிப்பாக இந்த ராயபுரம் தொகுதி மீண்டும் தி.மு.க-வின் கோட்டை என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை நம் அத்தனை பேருக்கும் இருக்கிறது. அதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

உங்கள் அத்தனை பேர் சார்பாகவும் மணமக்களுக்கு ஒரேயொரு கோரிக்கை. திருமணத்திற்குப் பின்பு இரண்டு பேரும் நல்ல காதலர்களாக, நல்ல நண்பர்களாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, எதற்கு விட்டுக்கொடுக்க வேண்டுமோ அதற்கு மட்டும் விட்டுக்கொடுத்து, உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

உங்களுக்குப் பிறக்கப்போகின்ற குழந்தைக்கு அழகான ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கூறி, மணமக்களை மீண்டும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைக் கழக செய்தி தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.மூர்த்தி உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்கள் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

---

## கிரிப்டோ நாணயங்களின்

# தவறான பயன்பாட்டைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

### நாடாளுமன்றத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.14-

தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் நாடாளுமன்றத்தில்,

கிரிப்டோ நாணயங்கள், டிஜிட்டல் சொத்துக்கள், எரிபொருள் பணமோசடி மற்றும் சட்டவிரோத வர்த்தகங்கள் மூலம் செய்யப்படும் பெரிய முதலீடுகள் குறித்து அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்தியுள்ளதா? டிஜிட்டல் சொத்துக்கள், கிரிப்டோ நாணயங்கள் மற்றும் என்.எப். டோக்கன்கள் ஆகியவற்றின் தவறான பயன்பாட்டைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? ஆகிய கேள்விகளை கேட்டு இருந்தார்.



இதற்கு மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

இந்தியாவில் கிரிப்டோ சொத்துக்கள், மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்கள், என். எப். டோக்கன்கள் உள்ளிட்டவை ஒழுங்குபடுத்தப்படவில்லை. அரசாங்கம் இந்த சொத்துக்கள் குறித்த தரவுகளை சேகரிப்பதில்லை. இருப்பினும், அரசாங்கம் இந்த துறையை நிதி புலனாய்வுப் பிரிவின் பணமோசடி எதிர்ப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்துப் போராடுவதற்கான ஒழுங்குமுறை நோக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது, இதனால் மெய் நிகர் டிஜிட்டல் சொத்துகள் சேவை வழங்குபவர்கள் பதிவு, வாடிக்கையாளர் விடாமுயற்சி, பதிவு வைத்தல் மற்றும் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனை அறிக்கையிடல் ஆகிய கடமைகளுக்கு உட்பட்டுள்ளனர்.

மேற்கண்ட அமைப்புகள் சேவை வழங்குபவர்களின் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனை அறிக்கைகளைப் பெற்று பகுப்பாய்வு செய்கிறது. மேலும் பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதி நடவடிக்கைகளைத் தடுக்க சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் உளவுத் தகவல்களை பரப்புகிறது. இதில் இணங்காத சேவை வழங்குநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது. அமலாக்க இயக்குநரகம் பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் பல கிரிப்டோ தொடர்பான வழக்குகளை விசாரித்து, ரூ. 4209.74 கோடி மதிப்புள்ள குற்ற நடவடிக்கைகளை இணைத்து, சொத்துக்களை பறிமுதல் செய்து அல்லது முடக்கி, 29 பேரை கைது செய்தது. மேலும் 24 புகார்களைப் பதிவு செய்துள்ளது. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தப்பியோடிய பொருளாதார குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மெய் நிகர் டிஜிட்டல் சொத்துகளுடன் தொடர்புடைய வரி ஏய்ப்பு வழக்குகள், பல சந்தர்ப்பங்களில் மத்திய நேரடி வரிகள் வாரியத்தால் கண்டறியப்பட்டுள்ளன. வருமான வரித்துறையின் வருமானவரி சட்டம், 1961 இன் படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வரி ஏய்ப்பு கண்டறியப்பட்ட இடங்களில், வரி செலுத்துவோரைத் தூண்டுதல், மின் சரிபார்ப்பு, மறு மதிப்பீடு, கணக்கெடுப்பு அல்லது தேடல் மற்றும் பறிமுதல் போன்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தன்னார்வ இணக்கத்தை ஊக்குவிப்பதற்கும், மெய் நிகர் டிஜிட்டல் சொத்து பரிவர்த்தனைகளை முறையாகப் புகாரளிப்பது மற்றும் உரிய வரிகளை செலுத்துவது குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் பிரசாரம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியின் கீழ், மெய் நிகர் டிஜிட்டல் சொத்துகள் பரிவர்த்தனைகளை மேற்கொண்ட, ஆனால் அவர்களின் வருமான வரி வருமான அட்டவணை மெய் நிகர் டிஜிட்டல் சொத்துகளில் அவற்றை வெளியிடாத அடையாளம் காணப்பட்ட வரி செலுத்துவோருக்கு தகவல் தொடர்புகள் வழங்கப்பட்டுள்ளன. தரவு பகுப்பாய்வு கருவிகள், திட்ட நுண்ணறிவு மற்றும் உள் தரவுத்தளங்கள், மெய் நிகர் டிஜிட்டல் சொத்து பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களை வருமான வரி தாக்கலில் உள்ள வெளிப்பாடுகளுடன் ஒப்பிடப் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், பினாமி சொத்து பரிவர்த்தனை தடைச்சட்டம்1988, மற்றும் கருப்புப் பணம் (வெளிப்படுத்தப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்துகள்) மற்றும் வரி விதிப்புச் சட்டம்2015 ஆகியவை மெய் நிகர் டிஜிட்டல் சொத்துகள் உள்பட அனைத்து சொத்துகளுக்கும் பொருந்தும். மெய் நிகர் டிஜிட்டல் சொத்துகள் உள்ளிட்ட சொத்துக்கள் பினாமியாக வைக்கப்பட்டால் வழக்குத் தொடர பினாமி சட்டம் உதவுகிறது, மேலும் கருப்புப் பணச்சட்டம் உள்ளிட்ட வெளியிடப்படாத வெளிநாட்டு சொத்துக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உதவுகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி மெய் நிகர் டிஜிட்டல் சொத்துபயனர்கள், வைத்திருப்பவர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு இந்த சொத்துக்களை கையாள்வது சாத்தியமான பொருளாதார, நிதி, செயல்பாட்டு, சட்ட, வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான அபாயங்களுடன் தொடர்புடையது என்று பல பொது அறிவிப்புகள் மூலம் எச்சரித்துள்ளது.

ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கையின் மூலம், கே.ஒய்.சி., பணமோசடி தடுப்பு, பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பதை தடுத்தல், பணமோசடி தடுப்புச் சட்டம் 2002 இன் கீழ் உள்ள கடமைகள் போன்றவற்றுக்கான தரநிலைகளை நிர்வகிக்கும் விதிமுறைகளுக்கு இணங்க, மெய் நிகர் டிஜிட்டல் சொத்துகளில் பரிவர்த்தனைகளுக்கான வாடிக்கையாளர் விடாமுயற்சி செயல்முறைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அதன் ஒழுங்கு முறை நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

---

## சேலம் மாவட்டத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம்!

# இதுவரை 69,570 நபர்களுக்கு பல்வேறு பரிசோதனைகள்!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் – முகாமை ஆய்வு செய்து – தகவல்!

சேலம், பிப். 14-

சேலம் மாவட்டத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம்களில் இதுவரை 69,570 நபர்களுக்கு பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. சேலம் வட்டாரம், சோளம்பள்ளம், சின்மயா வித்யாலயா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டு தகவல் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் வட்டாரம், சோளம்பள்ளம், சின்மயா வித்யாலயா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் (12.02.2026) நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்குப்பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அன்றையதினம் சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமானது தொடங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட 57 மருத்துவ முகாம்களில் 29,390 ஆண்களும், 40,180 பெண்களும் என மொத்தம் 69,570 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்று உள்ளனர். இதில் 52,342 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், 47,909 நபர்களுக்கு இசிஜி பரிசோதனையும், 6,439 நபர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை, 7,249 நபர்களுக்கு எக்கோ பரிசோதனையும் மற்றும் 4,041 நபர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக 12.02.2026 இச்சிறப்பு மருத்துவ முகாமானது சேலம் வட்டாரம், சோளம்பள்ளம், சின்மயா வித்யாலயா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடத்தப்படுகிறது. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவ துறைகள் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக, கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் 2 மாணவர்களுக்கு கண் கண்ணாடிகளையும், 2 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகங்களையும், பிரசவித்த 2 தாய்மார்களுக்கு குழந்தைகள் நல பெட்டகத்தினையும் அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.சௌண்டம்மாள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19 வயதிற்குட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் எதிரணியினரின் விக்கெட்டுகளை அதிக அளவில் வீழ்த்தி இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு காரணமான தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்கள் ஆர்.எஸ். அம்பரீஷ் மற்றும் தீபேஷ் தேவேந்திரன் ஆகியோருக்கு நேற்று முன்தினம் (12.2.2026) பாராட்டு தெரிவித்து அவர்களுடன் கலந்துரையாடினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி, தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் டி.ஜே.சீனிவாசராஜ் ஆகியோர் உள்ளனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (12.02.2026) சென்னையில் ரூபாய் 7.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க புதிய தலைமை அலுவலகக் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வுசெய்து பணிகளை தரமானதாகவும் விரைவாகவும் செய்து முடிக்க பொதுப்பணித்துறை அலுவலர்களை அறிவுறுத்தினார். தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர். பூ.ஆ.நரேஷ், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் செந்தில்ராஜ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.